சாட்சிகள் வாக்குமூலம்
பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.
O.S. No.85/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.அஜீசுல் ரகுமான் | தொழில் | | |
| த/பெ.<br>க/பெ. | : | முகம்மது யூசுப் | வயது | | |
| கிராமம் | : | பெரியகலையம்புத்தூர் | இனம் | | ஆண் |
| தாலுகா | : | பழனி | நாள் | : | **25.11.2025** |
| மாவட்டம் | : | திண்டுக்கல் | | | |

1973 ஆம் வருடத்திய வரைமுறைச் சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ஆம் நாள் அளித்த சாட்சியம்.

<u>வாதி தரப்பு முதல் விசாரணை</u>

நான் வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை சத்தியப்பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் என்னால் சொல்லப்பட்டவை தான். அவை எனக்கு நன்றாக தெரியும். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | | மாதிரி வரைபடம் அசல் |
| வா.சா.ஆ.2 | 07.11.2002 | வாதியின் தகப்பனார் வாதிக்கும், பிரதிவாதிக்கும் வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணம் சான்று நகல். |
| வா.சா.ஆ.3 | 28.04.2017 | வழக்குச் சொத்துக்களைப் பொறுத்து வாதியும், பிரதிவாதியும் ஏற்படுத்திக் கொண்ட பாகப்பரிவினை ஆவணம் சான்று நகல். |
| வா.சா.ஆ.4 | 09.03.2022 | பிராது B செட்யூல் சொத்திற்கு எனது பெயரில் செலுத்தப்பட்ட சொத்து வரி ரசீது அசல். |
| வா.சா.ஆ.5 | 08.12.2021 | பிராது B செட்யூலில் உள்ள வீட்டில் மின் இணைப்பிற்கு எனது பெயரில் செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீது அசல். |

| | | |
|---|---|---|
| நீ.மா.சா.ஆ.1 | 07.12.2024 | மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வாளர் அறிக்கை. |

எனது சாட்சியத்தையும், சான்றாவணங்களையும் ஏற்று நாங்கள் கோரிய பரிகாரத்தை வழங்கி உத்தரவிட வேண்டுகிறேன்.

(வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி கூடுதல் ஆவணம் தாக்கல் செய்வதற்காக வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

Taken down by me in open court and read over to the witness in Tamil and acknowledge by him/her to be correct

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2025.11.09 00:24:19 +0530

District Munsif,
Palani.